[2021] 7 எஸ்.சி.ஆர். 143

சஞ்சய் குமார் ராய்

-எதிர்-

உத்தர பிரதேச மாநில அரசு மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.472/2021)

மே 07, 2021

மாண்புமிகு உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு.என்.வி.ரமணா,

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யா காந்த்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அனிருத்தா போஸ்

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 - பிரிவு 397 - குற்றவியல் சீராய்வு - இ.த.ச. பிரிவுகள் 504 மற்றும் 506-ன் படி உள்ள ஒரு வழக்கில் குற்றவியல் நீதிபதி மேல்முறையீட்டாளரை விடுவிக்க மறுத்து விட்டார் - உச்சநீதிமன்றத்தின் ஏசியன் ரீசர்பேசிங் எனும் வழக்கின் முடிவை சுட்டிக்காட்டி கு.ந.ச. பிரிவு 397-ன் படி அதிகார வரம்பு இல்லை என்ற காரணத்தின்பேரில் உயர்நீதிமன்றம் குற்றவியல் சீராய்வு வழக்கை திருப்பி அனுப்பியது - மேல்முறையீட்டில் முடிவு : உயர்நீதிமன்றம் ஏசியன் ரீசர்பேசிங் வழக்கின் முடிவை சரியாக மதிப்பிடவில்லை - குறைந்தபட்சம் இரு காரணங்களில் ஒருவர் இம்மாதிரி

சொல்லலாம் - முதலில் மேற்சொன்ன வழக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்ப்பதாகவும், அது சிறப்பு சட்டம் மட்டுமன்றி, அதிகார வரம்பை வழக்கமாக பயன்படுத்துவதற்கு எதிரானதாகவுள்ள பிரிவு 19 ஒரு சிறப்பு தடையாகிறது - இரண்டாவதாக, உச்சநீதிமன்றம் ஏசியன் ரீசர்பேசிங் எனும் வழக்கில், பரவலான தேக்கம் மற்றும் குற்றவியல் சட்ட முறையில் தாமதம் இவற்றை எதிர்கொள்வதற்கான தேவையைப் பற்றி கவலை தெரிவித்தபோது, மது லிமாயி எனும் முந்தைய வழக்கில், வகுத்துரைக்கப்பட்ட கருத்துரையை பின்பற்றியது, அதில் குற்றச்சாட்டுக்களை வனைவது அல்லது விடுவிப்பதை மறுப்பது என இடைநிலை அல்லது இறுதியான முடிவு எடுப்பது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 397 (2) தடையினால் பாதிக்கப்படாது - இது தவிர, உயர்நீதிமன்றம் தனிப்பட்ட வழக்குகளில் உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதை தடுக்கவோ அல்லது நீதியின் நோக்கங்களை எட்டுவதற்கான உள்ளார்ந்த அதிகாரத்தை கொண்டுள்ளது - தற்போதைய வழக்கில், உயர்நீதிமன்றம் தகுதிப்பாடுகளின் அடிப்படையில் சீராய்வு மனுவை அனுமதிக்காமல், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு "விடுவிப்பு" எனும் மதிப்புமிகு உரிமையை புறக்கணித்தது, உயர்நீதிமன்றத்தின் வரம்புக்குட்பட்ட தவறு ஆகும் - உண்மைத் தன்மையை குற்றப்புலனாய்வில் ஆராய்வதையும், இது

சம்பந்தமான மற்ற சாட்சியங்களின் அம்சங்களையும் உயர்நீதிமன்றமும் கீழமை நீதிமன்றமும் சரிவர ஆராயாததால், உயர்நீதிமன்றம் மீண்டும் மறு ஆய்வு மனுவை புதிதாக விசாரித்து முடிவெடுக்க உத்தரவிடப்படுகிறது - இ.த.ச. - பிரிவுகள் 504 மற்றும் 506 – சீராய்வு.

அதிகார வரம்பு - உள்ளுரை ஆள்வரை - உயர்நீதிமன்றத்தின் உள்ளுரை ஆள்வரை - வரம்பெல்லை - முடிவு : ஒவ்வொரு வழக்குகளின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு நடைமுறையை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காகவும், நீதியின் குறிக்கோளை எட்டுவதற்காகவும் உயர்நீதிமன்றம் உள்ளார்ந்த அதிகார வரம்பை கொண்டுள்ளது - ஆயினும் மேற்சொன்ன அதிகார வரம்பை பயன்படுத்தும்போது உயர்நீதிமன்றம் கவனமாக இருக்க வேண்டும் - உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள விருப்புரிமை அதிகாரமானது குற்றவியல் நீதிமுறையை திறம்படவும், உரிய நேரத்திலும் நிறைவேற்றுவதற்கு கவனமாகவும், நடுநிலையுடனும் பயன்படுத்தப்பட வேண்டும் - ஆயினும் கூட, முழுமையான அணுகுமுறை செயலினை பரிந்துரைக்கவில்லை - இருப்பினும், தலையீடுகள் தனி சிறப்புடைய வழக்குகளில் அமையலாம், தவறும்பட்சத்தில், குடிமகனின் உரிமைகளில் கடுமையான தீங்கு ஏற்படலாம் - நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்துதல் - தடுப்பது - குற்றவியல் நீதி நிர்வாகம்.

வழக்கை மீண்டும் விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததில் இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

1.1. குற்றவியல் சீராய்வின் ஆள்வரையை அதிகார வரம்புடைய பிழைகளுக்கு மட்டுமே வரையறுக்கையில், மேற்படி ஏசியன் ரீசர்பேசிங் என்ற வழக்கின் தீர்ப்புரையை உயர்நீதிமன்றம் குறைவாக மதிப்பிட்டுள்ளதாக, நாங்கள் கருதுகிறோம். குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக இவ்வாறு சொல்கிறோம். முதலாவதாக, மேற்சொன்ன வழக்கின் முக்கிய சங்கதிகள், 1988, ஊழல் தடுப்பு சட்டம் (ஊ.த.ச.)-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்ப்பது குறித்து விவாதிக்கிறது. ஊ.த.ச., என்பது சிறப்பு சட்டம் என்பதோடு மட்டுமல்லாமல், சீராய்வு அதிகாரத்தை வழக்கமாக பயன்படுத்துவதற்கு எதிராக பிரிவு 19-ன் கீழ் ஒரு சிறப்பு தடையையும் கொண்டுள்ளது என்று மேற்குறிப்பிட்ட தீர்ப்புரை தெளிவாக்குகிறது. இரண்டாவதாக, மேற்படி ஏசியன் ரீசர்பேசிங் எனும் வழக்கில், குற்றவியல் சட்ட நடைமுறையில் உள்ள அளவுக்கு மீறிய நிலுவை மற்றும் கால தாமதங்களை கையாள்வதற்கான தேவை குறித்த கருத்தை வெளிப்படுத்துகையில் இந்நீதிமன்றம் வேற்சொன்ன மது லிமாயி -எதிர்- மகாராஷ்டிரா மாநில அரசு [(1977) 4 எஸ்.சி.சி. 551]

1.2. எனவே, மேற்படி மது லிமாயி என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்டவாறு சட்டத்தின் சரியான நிலைப்பாடு யாதெனில், குற்றச்சாட்டுக்களை வனையும் அல்லது விடுதலையை நிராகரிக்கும்

உத்தரவானது இடைநிலையானதாகவோ அல்லது இறுதியான தன்மை கொண்டதாகவோ இல்லை, எனவே, அது கு.ந.ச., பிரிவு 397 (2)-ன் தடையினால் பாதிக்கப்படாது. அதைத்தவிர, ஒவ்வொரு வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு வழக்கு நடைமுறைகளை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காகவோ அல்லது நீதியின் குறிக்கோளை அடைவதற்காகவோ உயர்நீதிமன்றம் உள்ளார்ந்த அதிகாரத்தை கொண்டுள்ளது என்று மேற்படி வழக்கில் இந்நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. மேற்கூறிய அதிகாரத்தை பயன்படுத்தும்போது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று முன்னரே கூறலாம். உயர்நீதிமன்றத்தின் விருப்புரிமையானது குற்றவியல் நீதிமுறையை திறம்பட மற்றும் குறித்த நேரத்தில் நிர்வகிப்பதற்காக கவனத்துடனும், நியாயமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், இந்நீதிமன்றம் நேரடியாக ஈடுபடாமல் இருப்பதாய் பரிந்துரைக்கவில்லை. இருப்பினும், விதிவிலக்கான வழக்குகளில் தலையீடுகள் இருக்க வேண்டும், அது தவறும் பட்சத்தில் குடிமகனின் உரிமைகள் கடுமையாக பாதிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படலாம். உதாரணமாக, புகாரின் கூற்றுகளோ அல்லது பதிவுருக்களில் சொல்லப்பட்ட மற்ற சான்றாதாரங்களோ ஒரு குற்றமற்ற நபரை தண்டிப்பதற்கான அறுதி முயற்சியாக இருக்கும்போது, நீதிமுறை நடவடிக்கை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்பது நீதிமன்றத்தின் தலையாய கடமை ஆகிறது.

2. மேலும், விசாரணை நீதிமன்றம் விடுவிப்பு விண்ணப்பத்தை பரிசீலிக்கையில் ஒரு அஞ்சலகம் போல் செயல்பட கூடாது என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்று. நீதிமன்றமானது சந்தேகத்திற்குரியவரை விசாரிப்பதற்கு போதுமான காரணம் உள்ளதா என்பதை கண்டறியும் பொருட்டு, சான்றுகளை நன்கு ஆராய வேண்டும். நீதிமன்றமானது, தாக்கல் செய்யப்பட்ட சான்றுகள் மற்றும் ஆவணங்களின் ஒட்டு மொத்த விளைவையும், அவ்வழக்கில் வெளிப்படுகின்ற அடிப்படை குறைபாடுகளையும், இன்னும் பிறவற்றையும் அநேக சாத்தியக் கூறுகளை கொண்டு பரிசீலிக்க வேண்டும். [இந்திய ஒன்றியம் -எதிர்- பிரபுல்லா குமார் சமல் (1979) 3 எஸ்.சி.சி. 4]. அதேபோன்று, தேவைப்படுமாயின் உரிய வழக்குகளில் மேல் விசாரணை நடத்த நீதிமன்றம் போதுமான அதிகாரத்தை கொண்டுள்ளது.

3. தற்போதைய வழக்கில், நற்கூறுகளின் அடிப்படையில் சீராய்வு மனுவை அனுமதிக்காமலும் "விடுவிப்பு" என்பதே குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளிக்கப்படும் மதிப்பு மிக்க உரிமை என்ற சங்கதியை புறக்கணித்ததன் மூலமும் நீதிசார் பிழை புரிந்துள்ளது. உயர்நீதிமன்றமும், கீழமை நீதிமன்றமும் இவ்வழக்கின் குற்ற விசாரணையின் நியாயத்தையும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் உள்ள தொடர்புடைய திருத்தும் போன்ற மற்ற அம்சங்களை ஆராயவில்லை என்ற சங்கதியை கருத்தில் கொண்டு உயர்நீதிமன்றம் வழக்கு

முழுவதையும் மீண்டும் பரிசீலித்து சீராய்வு மனுவை புதிதாக தீர்மானிக்க வேண்டிய அவசியமாகிறது.

மது லிமாயி -எதிர்- மஹாராஷ்ட்ரா மாநில அரசு (1977) 4 **எஸ்.சி.சி.** 551 : [1978] 1 **எஸ்.சி.ஆர்.** 749 மற்றும் இந்திய ஒன்றியம் -எதிர்- பிரபுல்லா குமார் சமல் (1979) 3 **எஸ்.சி.சி.** 4 : [1979] 2 **எஸ்.சி.ஆர்.** 229 - **சார்ந்துரைக்கப்பட்டது.**

ஏசியன் ரீசர்பேசிங் ஆஃப் ரோடு ஏஜென்சி பிரைவேட் லிமிடெட் -எதிர்- சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் (2018) 16 **எஸ்.சி.சி.** 299 : [2018] 2 **எஸ்.சி.ஆர்.** 1045 – **குறிப்பிடப்பட்டது.**

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[1978] 1 **எஸ்.சி.ஆர்.** 749	**சார்ந்துரைக்கப்பட்டது**	**பத்தி** 13
[2018] 2 **எஸ்.சி.ஆர்.** 1045	**குறிப்பிடப்பட்டது**	**பத்தி** 8
[1979] 2 **எஸ்.சி.ஆர்.** 229	**சார்ந்துரைக்கப்பட்டது**	**பத்தி** 16

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.472/2021

அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் சீராய்வு குறைபாடுடைய எண்.325/2014-இல் 28.11.2018 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

தீபக் நர்கோல்கர், மூத்த வழக்குரைஞர், திருமதி. பிரேர்னா சிங், திருமதி. திவ்யா மிஸ்ரா, சாந்தனு சாகர் - மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

எஸ்.ஆர். சிங், மூத்த வழக்குரைஞர், அன்குர் பிரகாஷ் - எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யா காந்த் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. 1860, இந்திய தண்டனைச் சட்டம் (இதில் இதற்கு பிறகு "இ.த.ச." என குறிப்பிடப்படும்) பிரிவுகள் 504 மற்றும் 506-ன் கீழ் என்.சி.ஆர். எண்.120/2012-இல் மேல்முறையீட்டாளரை விடுவிக்க மறுத்த சந்த் கபீர் நகரிலுள்ள முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவரின் 13.03.2014 தேதியிடப்பட்ட உத்தரவுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் சீராய்வு மனுவை அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து, 28.11.2018 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. தற்போதைய மேல்முறையீட்டை தீர்வு செய்வதற்கு தேவையான சங்கதிகளின் சுருக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகிய "தி பயனியர்" பத்திரிக்கை நிருபர் (குலதீப் மிஸ்ரா) வரையறைக்குட்பட்ட காவல் நிலையத்தில் புகார் ஒன்றினை தாக்கல்

செய்தார். "கல்பனா இண்டேன் சர்வீஸ்" எனும் சமையல் எரிவாயு முகமையின் முறைகேட்டிற்கு எதிராக பத்திரிக்கை விசாரணையை நடத்தியாக கூறப்படுகிறது. மேற்சொன்ன சமையல் எரிவாயு முகமை கள்ள வணிகம் செய்ததாக கூறப்பட்ட புகாரின் பேரில் விசாரணை நடத்தும் பொருட்டு, தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன் படி சில விபரங்கள் பெற விண்ணப்பித்து இருந்தார். மேல்முறையீட்டாளர் அந்த முகமையில் ஒரு பங்குதாரர் ஆவார். என்.சி.ஆர். அறிக்கையின்படி, இரண்டாம் எதிர்மேல்முறையீட்டாளரின் தொலைபேசி அழைப்பிற்கு பதிலளித்த மேல்முறையீட்டாளர், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரை பெயர் சொல்லி அழைத்து கொலை செய்வதாக அச்சுறுத்தினார் என்று கூறப்படுகிறது. 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் முகத்தில் பலமுறை சுட்டு அவரை அடையாளம் தெரியாத அளவிற்கு ஆக்குவதாக மேல்முறையீட்டாளர் அச்சுறுத்தினார் என்று கூறப்படுகிறது.

4. 08.05.2012 அன்று மேற்சொன்ன குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 155 (2)-ன் கீழ் உரிய தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் (த.கு.ந) முன்பு புகார்தாரர் விண்ணப்பித்தார். அதன்படி, நீதிமன்றம் உள்ளூர் காவல் நிலையம் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்திட உத்தரவிட்டது.

5. வழக்கு விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கருத்துக்கள் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டவை, அது வழக்கு குறிப்பேட்டின் ஒரு

பகுதி ஆகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்சொன்ன வாக்குமூலத்தின் முக்கிய குற்றச்சாட்டுகள் பின்வருமாறு:-

".....மனுதாரர் தனது கைபேசியை ஸ்பீக்கரில் வைத்துவிட்டு அவரது கைபேசி எண்ணான xxxxx-லிருந்து சஞ்சய் ராயின் கைபேசி எண்ணான xxxxx-க்கு தொடர்பு கொண்டு, மேற்சொன்ன எரிவாயு முகமையின் சமீபித்திய முறைகேடுகள் குறித்து விசாரித்தார். கைபேசி மூலம் சஞ்சய் ராய் மனுதாரரை தவறான வார்த்தைகளால் திட்டத் தொடங்கி அவரை கொன்று விடுவதாக மிரட்டினார். அதேசமயம், உனது தகவல் அறியும் உரிமையும், தொடர்புடைய அறிவுக்கூர்மையும் உனக்கு கை கொடுக்காது என்று மேலும் கூறினார். உனது முகம் அடையாளம் காண முடியாதபடி பல முறை சுட்டு விடுவேன்.(பிழை) சஞ்சய் ராய் விடுத்த அச்சுறுத்தலை முஹம்மது ஷரீப் கான் மற்றும் உமேஷ் குமார் பட் ஆகியோரும் கேட்டனர்."

எதிர்மேல்முறையீட்டாளர்-புகார்தாரரின் வாக்குமூலத்தில் முக்கிய மாற்றங்கள் இருந்தது, அதில் அவர் இங்குள்ள மேல்முறையீட்டாளர் கைபேசியில் அழைத்ததற்கான சாட்சிகளாக முஹம்மது ஷரீப் கான் மற்றும் உமேஷ் குமார் பட் ஆகியோரை குறிப்பிட்டார் என்பது தெளிவாகிறது.

6. எவ்வாறாயினும், புகார்தாரரின் வாக்குமூலம் மற்றும் இரு சாட்சிகளின் ஆணையுறுதி ஆவணம் ஆகியவற்றின் அடிப்படையில் 21.07.2012

அன்று இ.த.ச. பிரிவுகள் 504 மற்றும் 506-ன் கீழ் மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை அலுவலர் பதிவுருக்களில் உள்ள மேல்முறையீட்டாளரின் கூற்று அல்லது அவரது தரப்பிலான விவரங்களை கருத்தில் கொள்வது அவசியமானது என கருதவில்லை என்று இங்கு குறிப்பிடுவது இத்தருணத்தில் தேவையற்றது ஆகும்.

7. தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் 08.11.2012 அன்று இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். ஆயினும், குற்றச்சாட்டுக்களை வனையும் முன்பே, இ.த.ச. பிரிவுகள் 504 மற்றும் 506-ன் கீழ் தொலைபேசி மிரட்டல் என்ற குற்றச்சாட்டு குற்றமாக கருத முடியாது என்றும், புகார்தாரர் தன்னை பொய்யாக சிக்கவைத்துள்ளார் என்று வாதுரைத்து, கு.ந.ச. பிரிவு 239-ன் படி தன்னை விடுவிக்க கோரினார். மேலும், விசாரணை நியாயமற்றதாகவும், அணுகுமுறை ஒருதலை பட்சமானதாகவும் இருந்தது என்றும், விசாரணை அதிகாரி உண்மையை கண்டறிய எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை, மாறாக, மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழக்கை விரைவுபடுத்தும் பொருட்டு புகார்தாரரின் வாக்குமூலம் மற்றும் சோடிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் மீது சார்ந்து நின்றார் என்றும் கூறப்பட்டது. கற்றறிந்த த.கு.ந., மேல்முறையீட்டாளரின் வாதத்தை ஏற்காமல் அவரின் விடுவிப்பு விண்ணப்பத்தை கீழ்கண்டவாறு தள்ளுபடி செய்தார்:-

"xxx xxx xxx

விடுவிப்பு விண்ணப்பத்திற்கு ஆதரவாக உறுதிமொழி ஆவணம் அல்லது ஆவண சாட்சியம் என எந்த வகை பதிவுகளையும் விண்ணப்பதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் தாக்கல் செய்யவில்லை என பார்வையிடும்போது தெரிகிறது.

எந்த வார்த்தை தவறானது அல்லது மனுதாரரால் அச்சுறுத்தப்பட்ட வார்த்தை எது என்பதற்கான சான்று இந்நிலையில் தீர்மானிக்கப்பட முடியாது. (பிழை)

வாய்மொழி மற்றும் பதிவுருக்களில் உள்ள ஆவண மொழி சான்றுகளிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை வனைய பதிவுருக்களில் போதிய சான்று உள்ளன.

மேற்கூறிய சங்கதி மற்றும் சூழ்நிலைகளை, கருத்திற்கொண்டு கு.ந.ச. பிரிவு 239-ன் படி மனுதாரரான திரு. சஞ்சய் குமார் ராயால் 20.02.2014 அன்று தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் இந்த நிலையில் நிலைக்கத்தக்கதல்ல, எனவே தள்ளுபடி செய்வதற்குரியது.

xxx xxx xxx"

8. மேற்சொன்ன உத்தரவில் பாதிப்படைந்த மேல்முறையீட்டாளர் த.கு.ந.-வின் உத்தரவை மாற்றியமைக்கும்படி கோரி குற்றவியல் சீராய்வு மனு மூலம் உயர்நீதிமன்றத்தை அணுகினார். உயர்நீதிமன்றம் **ஏசியன் ரீசர்பேசிங்**

ஆ:ப் ரோடு ஏஜென்சி பிரைவேட் லிமிடெட் - எதிர்- சென்ட்ரல் பீரோ ஆ:ப் இன்வெஸ்டிகேஷன் [(2018) 16 **எஸ்.சி.சி.** 299] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை சார்ந்து நின்ற உயர்நீதிமன்றம், அதிகார வரம்பில் தனியுரிமை குறித்த பிழையை சரிசெய்வதற்காக மட்டுமே, அரிதினும் அரிதான வழக்குகளில் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களிலோ அல்லது விடுப்பை மறுக்கும் உத்தரவுகளிலோ தலையிடலாம் என்று கருத்துரைக்கப்பட்டது. த.கு.ந.-வின் உத்தரவில் அதிகார வரம்புடைய பிழை ஏதும் காணப்படாததால், குற்றவியல் சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

9. மேற்சொன்ன எதிர்ப்புக்குள்ளான உத்தரவால் அதிருப்தி அடைந்த மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர், சிறப்பு அனுமதி மனு மூலம் இந்நீதிமன்றத்தை அணுகினார்.

வாதுரைகள்:-

10. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், முதல் நோக்கிலேயே, புகார்தாரர் தாமே கைபேசியில் அழைத்து அதை ஸ்பீக்கரில் வைத்து, அந்த உரையாடல்களை கவனிக்க இரண்டு சாட்சிகளை தயார் செய்தார் என்ற அவரது குற்றச்சாட்டு சந்தேகத்திற்குரியதாக உள்ளது. காவல்துறையால் தொலைபேசி அழைப்பிற்கான பதிவுருக்கள் கோரப்படவில்லை, சாட்சிகளின் ஆணையுறுதி ஆவணம் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது, மேலும் கு.ந.ச., பிரிவு 161-ன் படி அவர்களது

வாக்குமூலங்களை பதிவு செய்வதற்கான முயற்சி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. விசாரணை அதிகாரி கண்மூடித்தனமாக நடவடிக்கை மேற்கொண்டு, இ.த.ச., பிரிவுகள் 323, 504 மற்றும் 506 உட்பட ஏழு குற்ற வழக்குகளில் ஈடுபட்டுள்ள புகார்தாரரின் சான்றாவணத்தை புறக்கணித்துள்ளது. மேற்சொன்ன சம்பவம் நடந்த சமயத்தில், புகார்தாரர் தங்களது பத்திரிகையில் பணியாற்றவில்லை என்று "தி பயனீர்" நாளிதழின் உள்நிலை பதிப்பாசிரியரின் கடிதம் வெளிப்படுத்துகிறது.

11. மாறாக, இது இ.த.ச., பிரிவுகள் 504 மற்றும் 506-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்வதற்கான குற்றச்சாட்டுக்கள் என்றும் உயர்நீதிமன்றமும், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரும் எந்த தவறும் இழைக்கவில்லை என அரசு தரப்பு வழக்குரைஞர் வலியுறுத்தினார்.இந்நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் சார்ந்து நின்றதோடு அல்லாமல் விடுவிப்பு குறித்து பரிசீலிக்கும் நிலையில், நீதிமன்றம் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணத்தின் சாட்சிய மதிப்பு குறித்து வினா எழுப்பியிருக்கக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள கர்நாடக அரசு -எதிர்- எம்.ஆர்.ஹிரேமத் [(2019) 7 எஸ்.சி.சி. 515] என்ற வழக்கின் கருத்துரையை சார்ந்து நின்றதோடு அல்லாமல், ஸ்ரீலேகா செந்தில்குமார் -எதிர்- சி.பி.ஐ [(2019) 7 எஸ்.சி.சி. 82] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டதான கு.ந.ச., பிரிவு 239-ன் கீழ் உள்ள

அதிகாரத்தை பயன்படுத்தும்போது, வழக்கின் நற்கூறுகள் குறித்து பரிசளிப்பது ஏற்புடையதல்ல என்பதையும் சார்ந்து நின்றார்.

பகுப்பாய்வு:-

12. எடுத்த எடுப்பிலேயே, கு.ந.ச., பிரிவு 397-ன் கீழான அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்ற காரணத்தின்பேரில் உயர்நீதிமன்றம் குற்றவியல் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்துள்ளது என்பதை நாம் காணலாம். வழக்கு நடவடிக்கையை தொடர்வது இவ்வழக்கில் நடைமுறையை தவறாக பயன்படுத்துவதற்கு வழிகோலுமா? என்பதை விளக்கமாக கண்டறிவது குறித்து இந்நீதிமன்றம் விரிவாக ஆராயவில்லை. மேற்சொன்ன ஏசியன் ரீசர்பேசிங் என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:-

> "..... எனவே, குற்றச்சாட்டுக்களை வணையும் தீர்ப்புரையானது, முற்றலும் இடைநிலை உத்தரவோ அல்லது இறுதி உத்தரவோ அல்ல என்பதை நாங்கள் உறுதி செய்கிறோம். ஒரு மனு குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவுகள் 397 அல்லது 482 அல்லது அரமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 227 ஆகியவற்றில் எவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் அதை பொருட்படுத்தாமல், உயர்நீதிமன்ற அதிகார வரம்பு அதற்கு தடையாகாது. இருப்பினும், இந்த அதிகார வரம்பு எந்த வகையிலும் தடை செய்யப்படாமல், விசாரணையை விரைவாக முடிப்பதை உறுதி

செய்யும்பொருட்டு இயற்றப்பட்ட சட்ட கொள்கைக்கு ஏற்ப அது பயன்படுத்தப்படவேண்டும். எனவே, வனையப்பட்ட குற்றச்சாட்டின் உத்தரவை எதிர்க்கையில், அதிகார வரம்பு குறித்த வெளிப்படையான பிழையை சரி செய்வதற்கு மட்டுமே அரிதினும் அரிதான வழக்குகளில் அதை அனுமதிக்க முடியும், மாறாக, வழக்கை மீண்டும் பரிசீலிப்பதற்க்காக அல்ல என்று கருத்துரைக்கப்பட்டது."

13. குற்றவியல் சீராய்வின் ஆள்வரையை அதிகார வரம்புடைய பிழைகளுக்கு மட்டுமே வரையறுக்கையில், மேற்படி ஏசியன் ரீசர்பேசிங் என்ற வழக்கின் தீர்ப்புரையை உயர்நீதிமன்றம் குறைவாக மதிப்பிட்டுள்ளதாக, நாங்கள் கருதுகிறோம். குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக இவ்வாறு சொல்கிறோம். முதலாவதாக, மேற்சொன்ன வழக்கின் முக்கிய சங்கதிகள், 1988, ஊழல் தடுப்பு சட்டம் (ஊ.த.ச.)-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிர்ப்பது குறித்து விவாதிக்கிறது. ஊ.த.ச., என்பது சிறப்பு சட்டம் என்பதோடு மட்டுமல்லாமல், சீராய்வு அதிகாரத்தை வழக்கமாக பயன்படுத்துவதற்கு எதிராக பிரிவு 19-ன் கீழ் ஒரு சிறப்பு தடையையும் கொண்டுள்ளது என்று மேற்குறிப்பிட்ட தீர்ப்புரை தெளிவாக்குகிறது. இரண்டாவதாக, மேற்படி ஏசியன் ரீசர்பேசிங் எனும் வழக்கில், குற்றவியல் சட்ட நடைமுறையில் உள்ள அளவுக்கு மீறிய நிலுவை மற்றும் கால தாமதங்களை கையாள்வதற்கான தேவை குறித்த கருத்தை வெளிப்படுத்துகையில் இந்நீதிமன்றம் வேற்சொன்ன மது லிமாயி -எதிர்-

மகாராஷ்டிரா மாநில அரசு [(1977) 4 எஸ்.சி.சி. 551] என்ற வழக்கில் வகுத்துரைத்துள்ள கருத்துரையை பின்பற்றியது. அது கீழ்கண்டவாறு:-

"27. ஆகவே, மாறுபட்ட சூழ்நிலைகளை கையாள்கையில், குற்றச்சாட்டுக்களை வனையும் உத்தரவானது இடைநிலையான உத்தரவு என்றும், கு.ந.ச., பிரிவு 397(2)-ன் கீழோ அல்லது 482-ன் கீழ் உடனோ தலையீடு கோர முடியாது என்றும் தீர்மானிக்கையில், முரண்பாடாக தோன்றும் கருத்துரைகள் செய்யப்படலாம் என்றிருந்தபோதிலும், மது லிமாயி [மது லிமாயி -எதிர்- மஹாராஷ்டிரா மாநில அரசு (1977) 4 எஸ்.சி.சி. 551 : 1978 எஸ்.சி.சி. (கிரிமினல்) 10] என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்ட கோட்பாடு பொருந்தக்கூடியதாக உள்ளது. குற்றச்சாட்டுக்களை வனையும் உத்தரவானது முற்றிலும் இடைநிலை உத்தரவு என்று தீர்மானிக்க முடியாது, அரசமைப்பு வகையங்களான அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 227 அல்லது கு.ந.ச., பிரிவு 397 (2) மற்றும் கு.ந.ச., பிரிவு 482 ஆகியவற்றின் கீழ் தலையிடும்படியான சூழ்நிலைகள் இருந்து, வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களின் உத்தரவுகளில் தலையிட்டு அதில் தடை வழங்கும் உயர்நீதிமன்றத்தின் அதிகாரமானது விதிவிலக்கான சூழ்நிலையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்."

(வலியுறுத்தி கூறப்பட்டது)

14. மேற்சொன்ன மது லிமாயி எனும் வழக்கில் இந்நீதிமன்றம் உறுதி செய்ததாவது:-

"9..... நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, குற்ற விசாரணையை நடத்துவதற்கு அதிகரம் இல்லை என்றும், அழைப்பாணை விடுப்பது என்பது, முற்றிலும் சட்டத்திற்கு முரணானதோ அல்லது செல்லாததோ அல்லது சொல்லப்பட்ட குற்றச்சாட்டின் பேரிலோ அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சான்றின் அடிப்படையிலோ குற்றம் ஏதும் நிரூபிக்கப்படாதிருந்து குற்றச்சாட்டுக்கள் வனையப்படாது இருந்தன என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தரவு அல்லது அழைப்பாணை விடுக்கும் உத்தரவு அல்லது குற்றச்சாட்டுக்களை வனையும் உத்தரவு ஆகியவற்றை எதிர்த்து அதே வகையான பரிகாரத்தை கோரி உயர்நீதிமன்றத்தில் சீராய்வு அதிகார வரம்பிற்குட்பட்ட வழக்கு சில நேரங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும். .....

10. இது போன்ற வழக்கில் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் உத்தரவோ அல்லது அழைப்பாணை விடுக்கும் நடவடிக்கை இடைநிலை உத்தரவாகும் என்று நாம் கருதினாலும் கூட, அது அவ்வாறு இல்லை என்பதை நாங்கள் நிரூபிக்கலாம், குற்றஞ்சாட்டப்பட்டவரை இறுதி வரை துன்புறுத்துவதை விட, குற்றவியல் நடவடிக்கையை கூடிய

அளவில் விரைவாக நிறுத்துவதற்கான உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்த முடியாது என்று சொல்வது நியாயமானதா? நீதிமன்றத்தின் நடைமுறையை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கு மற்றும்/அல்லது நீதியின் குறிக்கோளை எட்டுவதற்கு அத்தகையானது செயல்படாது என்பதே அதன் விடையாகும். பாதிக்கப்பட்ட நபரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் வகை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல."

(வலியுறுத்தி கூறப்பட்டது)

15. எனவே, மேற்படி மது லிமாயி என்ற வழக்கில் வகுத்துரைக்கப்பட்டவாறு சட்டத்தின் சரியான நிலைப்பாடு யாதெனில், குற்றச்சாட்டுக்களை வனையும் அல்லது விடுதலையை நிராகரிக்கும் உத்தரவானது இடைநிலையானதாகவோ அல்லது இறுதியான தன்மை கொண்டதாகவோ இல்லை, எனவே, அது கு.ந.ச., பிரிவு 397 (2)-ன் தடையினால் பாதிக்கப்படாது. அதைத்தவிர, ஒவ்வொரு வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு வழக்கு நடைமுறைகளை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்காகவோ அல்லது நீதியின் குறிக்கோளை அடைவதற்காகவோ உயர்நீதிமன்றம் உள்ளார்ந்த அதிகாரத்தை கொண்டுள்ளது என்று மேற்படி வழக்கில் இந்நீதிமன்றம் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. மேற்கூறிய அதிகாரத்தை பயன்படுத்தும்போது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று முன்னரே கூறலாம்.

உயர்நீதிமன்றத்தின் விருப்புரிமையானது குற்றவியல் நீதிமுறையை திறம்பட மற்றும் குறித்த நேரத்தில் நிர்வகிப்பதற்காக கவனத்துடனும், நியாயமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், இந்நீதிமன்றம் நேரடியாக ஈடுபடாமல் இருப்பதாய் பரிந்துரைக்கவில்லை. இருப்பினும், விதிவிலக்கான வழக்குகளில் தலையீடுகள் இருக்க வேண்டும், அது தவறும் பட்சத்தில் குடிமகனின் உரிமைகள் கடுமையாக பாதிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படலாம். உதாரணமாக, புகாரின் கூற்றுகளோ அல்லது பதிவுருக்களில் சொல்லப்பட்ட மற்ற சான்றாதாரங்களோ ஒரு குற்றமற்ற நபரை தண்டிப்பதற்கான அறுதி முயற்சியாக இருக்கும்போது, நீதிமுறை நடவடிக்கை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்பது நீதிமன்றத்தின் தலையாய கடமை ஆகிறது.

16. மேலும், விசாரணை நீதிமன்றம் விடுவிப்பு விண்ணப்பத்தை பரிசீலிக்கையில் ஒரு அஞ்சலகம் போல் செயல்பட கூடாது என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்று. நீதிமன்றமானது சந்தேகத்திற்குரியவரை விசாரிப்பதற்கு போதுமான காரணம் உள்ளதா என்பதை கண்டறியும் பொருட்டு, சான்றுகளை நன்கு ஆராய வேண்டும். நீதிமன்றமானது, தாக்கல் செய்யப்பட்ட சான்றுகள் மற்றும் ஆவணங்களின் ஒட்டு மொத்த விளைவையும், அவ்வழக்கில் வெளிப்படுகின்ற அடிப்படை குறைபாடுகளையும், இன்னும் பிறவற்றையும் அநேக சாத்தியக் கூறுகளை கொண்டு பரிசீலிக்க வேண்டும். [இந்திய ஒன்றியம் -எதிர்- பிரபுல்லா குமார் சமல் (1979) 3 எஸ்.சி.சி. 4].

அதேபோன்று, தேவைப்படுமாயின் உரிய வழக்குகளில் மேல் விசாரணை நடத்த நீதிமன்றம் போதுமான அதிகாரத்தை கொண்டுள்ளது.

17. உயர்நீதிமன்றம் இவ்வழக்கின் நற்கூறுகளை ஆராயாததாலும், மேற்கூறிய வழக்குகளில் நன்கு அறுதியிடப்பட்ட சட்டத்தின் துணைகொண்டு இவ்வழக்கை பகுப்பாய்வு செய்யததாலும் தற்போதைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

18. நற்கூறுகளின் அடிப்படையில் சீராய்வு மனுவை அனுமதிக்காமலும் "விடுவிப்பு" என்பதே குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளிக்கப்படும் மதிப்பு மிக்க உரிமை என்ற சங்கதியை புறக்கணித்ததன் மூலமும் நீதிசார் பிழை புரிந்துள்ளது. உயர்நீதிமன்றமும், கீழமை நீதிமன்றமும் இவ்வழக்கின் குற்ற விசாரணையின் நியாயத்தையும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் உள்ள தொடர்புடைய திருத்தும் போன்ற மற்ற அம்சங்களை ஆராயவில்லை என்ற சங்கதியை கருத்தில் கொண்டு உயர்நீதிமன்றம் வழக்கு முழுவதையும் மீண்டும் பரிசீலித்து சீராய்வு மனுவை புதிதாக தீர்மானிக்க வேண்டிய அவசியமாகிறது. அதன்படி, 28.11.2018 தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நீக்கறவு செய்து, சட்டப்படி இவ்வழக்கை மறு பரிசீலனை செய்ய உயர்நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்புகிறோம்.

19. மேற்சொன்ன வரையறைகளுடன் மேல்முறையீடு தீர்வு செய்யப்படுகிறது.

விண்ணப்பங்கள் நிலுவையில் இருப்பின் அவை அனைத்தும் தீர்வு செய்யப்படுகிறது.

வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."